27.05.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சென்னையில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்



**சென்னை:** வெப்ப சலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் இன்று காலை முதல் குளிர்ந்த காற்று வீசி வருவதோடு, வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும், மேலும் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் கூறப்பட்டுள்ளது.

சென்னையில் வெப்ப சலனம் குறைந்து, வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். சென்னையில் வெப்பம் குறைந்து காணப்படும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## முல்லைப் பெரியாறு அணையில் துணைக் கண்காணிப்பு குழு இன்று ஆய்வு

**கூடலூர்:** முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தை உயர்த்த உத்தரவிட்ட உச்சநீதிமன்றம் அணையை கண்காணித்து பராமரிக்க, மத்திய நீர்வள ஆணைய தலைமை பொறியாளர் என்.ஏ.வி.நாதன் தலைமையில் மூவர் கொண்ட கண்காணிப்பு குழுவை நியமித்தது.

இக்குழுவிற்கு உதவியாக மத்திய நீர்வள ஆணைய செயற்பொறியாளர் அம்பர்ஜி ஹாரிஷ்கிரீஷ் தலைமையில் துணைக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஐந்து மாதங்களுக்கு பிறகு மீண்டும் இன்று பெரியாறு அணையில் ஆய்வு செய்கிறது.

## உதகையில் மலர்த் திருவிழா: 120-ஆவது மலர்க் காட்சி இன்று தொடக்கம்

உதகையின் பிரதான மலர்த் திருவிழாவான மலர்க் காட்சி அரசினர் தாவரவியல் பூங்காவில் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது.

3 நாள்கள் நடைபெறும் இக்கண்காட்சியை தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் ஆர்.துரைக்கண்ணு தொடங்கி வைக்கிறார்.

உதகையில் ஆண்டுதோறும் அரசினர் தாவரவியல் பூங்காவில் மே மாதத்தின் மூன்றாவது வாரத்தில் மலர்க் காட்சி நடைபெறும். ஆனால், இவ்வாண்டில் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நடவடிக்கைகளின் காரணமாக மலர்க் காட்சி மே மாதத்தின் கடைசி வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதன்படி, வெள்ளிக்கிழமை காலையில் இக்கண்காட்சியை தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் ஆர்.துரைக்கண்ணு தொடங்கி வைக்கிறார். மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தமிழக அரசின் வேளாண்மைத் துறை செயலாளர் விஜயகுமார், தோட்டக்கலைத் துறை இயக்குநர் சித்திரசேனன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்த மலர்க் காட்சிக்காக பூங்காவில் பல்வேறு மலர்களாலான வடிவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில், குறிப்பிடத்தக்க அம்சமாக ஒரு லட்சம் காரனேஷன் மலர்களைக் கொண்டு மணிகூண்டுடன் கூடிய சென்னை சென்ட்ரல்

ரயில் நிலையத்தின் முன்புறத் தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. 68 அடி உயரத்திலும், 30 அடி அகலத்திலும் இந்த மாதிரி உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல, சுமார் 10,000 காரனேஷன் மலர்களைக் கொண்டு இரட்டைக்குருவி உருவம் உருவாக்கப்பட்டுள்ளது.


பூங்காவில் உள்ள காட்சி மாடத்தில் துலிப், கிரசாந்திமம், பிண்டுஷன் போன்ற வெளிநாட்டு மலர்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் நெதர்லாந்து நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவையாகும். அதேபோல, நீலகிரி மாவட்டத்தில் விளையும் கொய் மலர்களான ஜெர்பரா, காரனேஷன், லில்லியம் மற்றும் கிரசாந்திமம் போன்ற மலர்களும் காட்சி மாடத்தில் வைக்கப்பட்டுள்ளன. காட்சி மாடத்தில் மட்டும் 15,000 மலர்த்தொட்டிகளும், புது பூங்காவில் 6,000 மலர்த் தொட்டிகளும் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

மேலும், பூங்காவின் முன்புற வாயிலிலிருந்து மலர்க் காட்சி அரங்கு வரை 10 இடங்களில் மலர் வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. பூங்காவின் நுழைவுக் கட்டணத்தை வசூலிக்கும் பொறுப்பை தோட்டக் கலைத் துறையினரே மேற்கொண்டுள்ளனர். பெரியவர்களுக்கு ரூ. 30-ம், சிறியவர்களுக்கு ரூ. 15-ம், கேமராவிற்கு ரூ. 50-ம், விடியோ கேமராவிற்கு ரூ. 100-ம் கட்டணங்களாகும். பூங்காவில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை மலர்க்காட்சியை கண்டுகளிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. மலர்க் காட்சியையொட்டி பூங்காவைச் சுற்றிலும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அதேபோல, 3 நாள்களிலும் பூங்காவிற்குள் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தினமணி அரங்கு:**

உதகை மலர்க் காட்சியில் முதன்முறையாக தினமணியின் சார்பில் காட்சி அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கில் கடந்த 80 ஆண்டுகளில் தினமணி மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைளில் முதல் பக்கத்தில் வெளியான முக்கியச் செய்திகளின் தொகுப்பு இடம் பெற்றுள்ளது. அதேபோல, தினமணி மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளின் இதர வெளியீடுகள் தொடர்பான விவரங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## கொடைக்கானலில் கோடை விழா மலர்க் கண்காட்சி நாளை தொடக்கம்



கொடைக்கானலில் கோடை விழா மலர்க் கண்காட்சி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை என இரண்டு நாள்கள் நடைபெறுகிறது. இதையொட்டி, பிரையண்ட் பூங்காவில் சால்வியா, டேலியா, டைந்தேஷ், ஆந்தோரியம், மேரிகோல்ட், சில்வேனியா, ரோஜா உள்ளிட்ட 60-க்கும் மேற்பட்ட வகைகளில் லட்சக்கணக்கான மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. மேலும், ஆயிரக்கணக்கான மலர்களால் மயில், தாஜ்மகால் போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் காய்கறிகளால் கோபுரங்கள் உருவாக்கப்பட்டு கண்காட்சியாக வைக்கப்பட உள்ளது.

தொடர்ந்து ஜூன் 6-ஆம் தேதி வரை 10 நாள்கள் நடைபெற உள்ள கோடை விழாவில், பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், நாய் கண்காட்சியும் நடைபெறுகிறது. விழாவையொட்டி சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள்

செய்யப்பட்டு வருகின்றன. விழாவுக்கான ஏற்பாடுகளை தோட்டக் கலைத் துறை நிர்வாகம் செய்துள்ளது.

இதேபோல, படகு குழாம் சார்பில் 28, 29 ஆகிய தேதிகளில் படகுப் போட்டி, வாத்து பிடிக்கும் போட்டிகள் நடைபெற உள்ளன. இதில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரையிலான 200-க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர் என கொடைக்கானல் படகு குழாம் மற்றும் ரோயிங் கிளப் கௌரவச் செயலர் பவானி சங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## தக்காளி, பீன்ஸ், அவரை விலை கடும் உயர்வு



வெயிலின் தாக்கம் காரணமாக சென்னையில் தக்காளி, பீன்ஸ், அவரை உள்ளிட்ட காய்கறிகளின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது.

சென்னை கோயம்பேடு சந்தையில் கடந்த மார்ச் மாதத்தில் தக்காளி, பெரிய வெங்காயம், முருங்கைக்காய் உள்பட பெரும்பாலான காய்கறிகளின் விலை கிலோ ரூ.15 முதல் ரூ.30 வரை விற்பனையானது. இதைத் தொடர்ந்து கோடை

வெயில் சுட்டெரித்ததாலும், வரத்து குறைந்ததாலும் அவற்றின் விலை படிப்படியாக அதிகரித்து வந்தது.

சென்னை கோயம்பேடு சந்தையில் கடந்த சில நாள்களாக காய்கறிகளின் விலை வழக்கத்தைக் காட்டிலும் 50 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. குறிப்பாக மொத்த விலையில் ஒரு கிலோ நாட்டுத் தக்காளி ரூ.50-க்கும், பெங்களூர் தக்காளி ரூ.60-க்கும், பீன்ஸ் ரூ.120-க்கும், அவரை ரூ.65-க்கும் விற்பனையானது. இந்த விலை உயர்வு சில்லறை விற்பனையில் கடுமையாக எதிரொலித்தது. சில்லறை விற்பனையில் அரை கிலோ நாட்டுத்தக்காளி, அவரை ஆகியவை ரூ.40 வரை விற்கப்பட்டன.

இது குறித்து கோயம்பேடு காய்கறி வியாபாரிகள் சங்க ஆலோசகர் சௌந்தரராஜன் கூறுகையில், ஆண்டுதோறும் மார்ச் முதல் ஜூன் மாதம் வரை காய்கறிகளின் விலை உயர்ந்து காணப்படும். இது வழக்கமான ஒன்றுதான். இந்த மாதத் தொடக்கத்தில் 230 முதல் 250 லாரிகளில் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டன. ஆனால் கடந்த சில வாரங்களாக வரத்து தொடர்ந்து குறைந்து தற்போது 160 லாரிகளில் மட்டுமே காய்கறிகள் கொண்டு வரப்படுகின்றன.

தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் வெயிலின் தாக்கம் அதிகரித்ததன் காரணமாக காய்கறி விளைச்சல் 30 சதவீதம் வரை குறைந்தது. இதன் காரணமாக காய்கறி விலை அதிகரித்துள்ளது. இன்னும் ஒன்றரை மாதத்துக்கு இதே நிலையே நீடிக்கும் என்றார் அவர்.
கோயம்பேடு சந்தையில் வியாழக்கிழமை நிலவரப்படி

காய்கறிகளின் விலை நிலவரம் (கிலோவில்)

மொத்தவிலை சில்லறை விலை

நாட்டுத்தக்காளி ரூ. 50 ரூ. 60-75

பெங்களூர் தக்காளி ரூ. 60 ரூ. 70-85

வெண்டைக்காய் ரூ. 45 ரூ. 70

கேரட் ரூ. 40 ரூ. 50-60

அவரை ரூ. 50-60 ரூ .75

பீன்ஸ் ரூ. 100-130 ரூ. 115-150

பீட்ரூட் ரூ. 30 ரூ. 45

உருளைக்கிழங்கு ரூ. 22 ரூ. 40

பாகற்காய் ரூ. 35 ரூ. 50

காலிபிளவர் ரூ. 36 ரூ. 48

முருங்கைக்காய் ரூ. 40 ரூ. 60

பெரிய வெங்காயம் ரூ. 18-25 ரூ. 35

சாம்பார் வெங்காயம் ரூ. 40 ரூ. 45-60

கொத்தவரை ரூ .32 ரூ .45

பச்சை மிளகாய் ரூ .90 ரூ .120

கொத்தவரை ரூ. 32 ரூ. 50

இஞ்சி பழையது ரூ .70 ரூ .80-90

கொத்துமல்லி ஒரு கட்டு ரூ. 15 ரூ .20

**பறவைக் காய்ச்சல்: ஆந்திர எல்லையில் தீவிர சோதனை**




திருத்தணி அருகே ஆந்திர எல்லைப் பகுதியில் பறவைக் காய்ச்சல் நோய்த் தடுப்பு பணியில் கால்நடை பராமரிப்புத் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் பறவைக் காய்ச்சல் பரவியதையடுத்து, தமிழக எல்லைப் பகுதிகளில் நோய்த் தடுப்புப் பணிகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. திருவள்ளூர் மாவட்டத்தில் ஆந்திர எல்லைப் பகுதியில் அமைந்துள்ள திருத்தணி, ஊத்துக்கோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் நோய்த் தடுப்பு பணிகளில் கால்நடை பராமரிப்புத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் திருத்தணி அருகே சென்னை - திருப்பதி தேசிய நெடுஞ்சாலை பொன்பாடி வாகனச் சோதனை சாவடியில் கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் செல்லதுரை மேற்பார்வையில் கால்நடை பராமரிப்பு உதவி மருத்துவர்கள், ஆய்வாளர்கள், பராமரிப்பு உதவியாளர்கள் வாகனங்களை சோதனையிட்டு, கிருமி நாசினி தெளித்தல் பணியை மேற்கொண்டனர். தொடர்ந்து இப்பணி நடைபெற்று வருகிறது.

## சாத்தூரில் ஆலங்கட்டி மழை

சாத்தூரில் வியாழக்கிழமை பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்தது.

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் பகுதியில் கடந்த சில நாள்களாக கடுமையான வெயில் நிலவியது. இதனால், பொதுமக்கள் வெளியில் வர அச்சப்பட்டனர். இந்நிலையில், வியாழக்கிழமை மதியம் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர், பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்தது.

சாத்தூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் அரை மணி நேரம் பெய்த இந்த மழையால், வெப்பம் தணிந்து குளுமை நிலவியது. இதனால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

இந்த மழையால், சாத்தூர் பிரதான சாலை, பை-பாஸ் சாலை உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் தேங்கி, போக்குவரத்துக்கு சிரமம் ஏற்பட்டது.

## காய்கறி விளைச்சல் குறைவு: விலை உயர்வு

ராஜபாளையம் பகுதியில் காய்கறிகளின் விளைச்சல் குறைவால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

கோடை வெயில் காரணமாக காய்கறி தோட்டங்கள் கருகி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், வைகாசி மாதத்தில் திருமணம் மற்றும் கோயில் விழாக்கள் அதிக அளவில் நடைபெறுவதால், காய்கறிகளின் தேவை அதிகரித்துள்ளது. இந்நிலையில், விளைச்சல் குறைவு, தேவை அதிகம் என்பதால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். எனவே, வியாழக்கிழமை ராஜபாளையம் சந்தையில், தக்காளி கிலோ ரூ. 60 முதல் ரூ. 80 வரையும், ஒரு முருங்கை ரூ. 3 முதல் ரூ. 4 வரையும், எலுமிச்சை கிலோ ரூ. 80 முதல் ரூ. 130, மாங்காய் கிலோ ரூ. 20 முதல் ரூ. 40, கீரை வகைகள் கட்டு ரூ. 10, வாழைப் பூ ஒன்று ரூ. 5, காலிபிளவர் பூ ஒன்று ரூ. 12-க்கும் விற்கப்பட்டது. இதுபோல், அனைத்து காய்கறிகளின் விலையும் 30 முதல் 40 சதம் வரை உயர்ந்திருக்கிறது.

**காவிரியில் உபரி நீரை சேமிக்கவே மேகதாது அணை கட்டப்படுகிறது**

காவிரியில் கிடைக்கும் உபரி நீரை சேகரிப்பதற்காகவே மேகதாது அணை கட்டப்படுகிறது, இதில் எவ்வித விதிமுறை மீறலும் இல்லை என கர்நாடக மாநில உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கோவை காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு வியாழக்கிழமை அவர் அளித்த பேட்டி:

இரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள மத்திய பாஜக அரசு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தரவில்லை. மேலும் ரூ. 47 ஆயிரம் கோடி விவசாயிகள் கடன் ரத்து செய்யப்படவில்லை. ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ரூ. ஒரு லட்சத்து 14 ஆயிரம் கோடி, அளவுக்கு கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது.

முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் 2012-ஆம் ஆண்டு முதல் 2014-ஆம் ஆண்டு வரை 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 98 லட்சத்து 32 ஆயிரத்து 834 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. ஆனால், பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு 2014-ஆம் ஆண்டு முதல் 2016-ஆம் ஆண்டு வரையில் 73 லட்சத்து 30 ஆயிரத்து 762 பேருக்குதான் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

இதே போல காங்கிரஸ் ஆட்சி காலத்தில் வேளாண்மைத் துறையில் 42.6 பில்லியன் டாலர்(ஒரு பில்லியன்-100 கோடி) அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் 32.56 பில்லியன் டாலர் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

விவசாய உற்பத்தி வளர்ச்சியை எட்டவில்லை. ரூ. 80 லட்சம் கோடி கருப்பு பணத்தை மீட்டு அனைவருக்கும் தலா ரூ.15 லட்சம் வரை தருவோம் என மோடி வாக்குறுதி அளித்தார். ஆனால், அதற்கான எவ்வித நடவடிக்கையும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும், 3.1 பில்லியன் டாலராக இருந்த வெளிநாட்டு முதலீடு, தற்போது 1.9 பில்லியன் டாலராக குறைந்துள்ளது. பிரதமரின் வெளிநாட்டு சுற்றுப் பயணத்துக்கு மட்டுமே ரூ. 567 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் எவ்வித வெளிநாட்டு முதலீடுகளும் வரவில்லை.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை குறைந்த நிலையில், பெட்ரோல், டீசல் விலை குறைக்கப்படாமல் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகிறது. அதிக அளவில் மழைப் பொழிவு இருக்கும்போது, உபரி நீரை சேமிப்பதற்காக காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டப்படவுள்ளது. இதில், எவ்வித விதிமுறை மீறலும் இல்லை.

அனைத்து மாநில அரசுகளும் தண்ணீரை சேமிப்பதற்கான வழிமுறைகளைத் தேட வேண்டும். தமிழகத்துக்கு தண்ணீர் தேவை என்றால் தங்கள் பகுதியில் அணை கட்டி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றார்.

## பறவைக் காய்ச்சல்: நோய் எதிர்ப்பு மருந்து தெளிக்கும் பணி தீவிரம்

கர்நாடக மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் பரவி வருவதால் கூடலூரைச் சுற்றியுள்ள கேரள மற்றும் கர்நாடக மாநில எல்லைகளில் வாகனங்களுக்கு நோய் எதிர்ப்பு மருந்து தெளிக்கும் பணி வியாழக்கிழமை நடைபெற்றது.

கூடலூர் பகுதி கேரளம், கர்நாடக மாநில எல்லைகளில் அமைந்துள்ளது. கர்நாடகத்தில் பறவைக் காய்ச்சல் பரவி வருவதாக கிடைத்த தகவலையடுத்து, கர்நாடக மாநிலத்தின் நுழைவுவாயிலான கக்கநல்லா சோதனைச் சாவடி, வயநாடு மாவட்டத்தின் எல்லைகளான பாட்டவயல், அம்பலமூலா, நம்பியார்குன்னு, கக்குண்டி, சோலாடி, மலப்புரம் மாவட்ட எல்லையான கீழ் நாடுகாணி ஆகிய பகுதிகளில் வெளி மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்து வருகின்றனர்.

கால்நடை பராமரிப்புத் துறையினர் சோதனை செய்து நோய்த் தடுப்பு மருந்துகளை தெளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பாதையில் கிருமி நாசினிகளை பரப்பிவிட்டு அதன் மீது வாகனங்களை நகர்த்தி சோதனை செய்த பிறகே தமிழகத்துக்குள் வாகனங்களை அனுமதிக்கின்றனர்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.4.10, சென்னையில் ரூ.4.40.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு வியாழக்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.86, முட்டைக்கோழி கிலோ ரூ.73.

## ஜூன் முதல் வாரத்தில் பருத்தி ஏலம் தொடக்கம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், பாபநாசம், திருப்பனந்தாள் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பருத்தி மறைமுக ஏலம் ஜூன் முதல் வாரத்தில் தொடங்கப்படவுள்ளது.

இதுகுறித்து தஞ்சாவூர் விற்பனைக் குழுச்செயலர் மு. ரவி தெரிவித்திருப்பது:

தஞ்சாவூர் விற்பனைக் குழுவுக்குள்பட்ட கும்பகோணம், பாபநாசம், திருப்பனந்தாள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் நிகழாண்டு பருத்தி மறைமுக ஏலம் ஜூன் முதல் வாரத்தில் தொடங்கப்படவுள்ளது. இந்த ஏலத்தின்போது பருத்தி கொள்முதல் செய்ய உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே, பருத்தி விவசாயிகள் தங்களது விளைபொருளை நன்கு நிழலில் உலர வைத்து, தூய்மை செய்து அருகில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்குக் கொண்டு சென்று நல்ல விலைக்கு விற்பனை செய்து பயன் பெறலாம். மேலும் விவரங்களுக்கு கும்பகோணம், பாபநாசம், திருப்பனந்தாள் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடப் பொறுப்பாளர்களை அணுகலாம்.

## சேலத்துக்கு 1,100 டன் சன்னரக அரிசி அனுப்பிவைப்பு

நீடாமங்கலத்திலிருந்து சேலத்துக்கு 1,100 டன் சன்னரக அரிசி பொது விநியோகத் திட்டத்துக்காக வியாழக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை ஆகியவற்றிலிருந்து 88 லாரிகளில் 1,100 டன் சன்னரக அரிசி மூட்டைகள் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு வியாழக்கிழமை கொண்டுவரப்பட்டன. 80 சுமை தூக்கும் தொழிலாளர்கள் அரிசி மூட்டைகளை சரக்கு ரயிலின் 22 பெட்டிகளில் ஏற்றினர். இதைத்தொடர்ந்து, அரிசி மூட்டைகள் சரக்கு ரயிலில் பொது விநியோகத் திட்டத்துக்காக சேலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்பணிகள் நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

## பறவைக் காய்ச்சலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை: ஆணையர்

திருநெல்வேலி மாநகரில் பறவைக் காய்ச்சலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மாநகராட்சி ஆணையர் சிவ. சுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கர்நாடக மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் நோய் ஏற்படுவதற்கான அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ள நிலையில், மாநகராட்சிப் பகுதிகளில் பறவைக் காய்ச்சலைத் தடுக்கும் வகையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாநகரப் பகுதிகளில் அமைந்துள்ள கோழிப் பண்ணைகள், மொத்த கோழி விற்பனை நிலையங்கள், கோழிச் சந்தை நடைபெறும் இடங்கள், கோழி இறைச்சி சில்லறை விற்பனை நிலையங்கள், ஆடறுப்புமனைகளில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ள சுகாதாரப் பிரிவு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாநகரப் பகுதிகளில் கோழிகள், காகங்கள், பறவைகள் சாதாரண முறையில் இறந்துகிடக்கும் பட்சத்தில் அவற்றை முறையாக அப்புறப்படுத்துவதற்கும்,

அவற்றால் நோய் பரவாமல் தடுப்பதற்கும் தொடர் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், பிளீச்சிங் பவுடர், பினாயில், நீர்த்த சுண்ணாம்பு போன்ற நோய்த்தடுப்பு கிருமி நாசினிகள் தேவையான அளவு இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. அனைத்து சுகாதார ஆய்வாளர்கள், செவிலியர்கள், பகுதி சுகாதார செவிலியர்கள், நகர சுகாதார ஆய்வாளர்கள் தொடர் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் மாநகராட்சி மேற்கொள்ளும் பறவைக் காய்ச்சல் நோய்த் தடுப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்க வேண்டும். கோழிகள், பறவைகள் அசாதாரண முறையில் இறந்து கிடக்கும்பட்சத்தில் அதுபற்றிய விவரங்களை மாநகராட்சி நிர்வாகத்திடம் தெரியப்படுத்த வேண்டும் என்றார் அவர்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஒயினுக்கு புவியியல் குறியீடு

ஓர் இடத்தில் உற்பத்தியாகும் பொருளுக்கு வர்த்தகரீதியான பாதுகாப்பை புவியியல் குறியீடு எண் தருகிறது.இந்தியாவில் 'நாசிக் பள்ளத்தாக்கு ஒயின்' என்ற பெயரில் ஒயினும் புவியியல் குறியீடு எண் பெற்றுள்ளது. திராட்சைப் பழங்கள் அதிக அளவில் விளைவிக்கப்படும் நாசிக்கில் 80 சதவீதம் ஒயின் உற்பத்திக்கு பயன்படுகிறது. நாசிக் நகரை'இந்தியாவின் ஒயின் தலைநகரம்' என கூறுவர் ஒயினைப் பொறுத்தவரை 13 முதல் 17 வரை எண்ணுள்ளவை ஏற்கத்தக்கவை. 20 எண்ணுள்ளவை மிக நல்லவை என தரமதிப்பீடுசெய்யப்படுகின்றன. நாசிக் ஒயின் மட்டுமின்றி நாசிக் திராட்சையும் தனியாக புவியியல் குறியீடு எண் பெற்றுள்ளது.

## ஊட்டி மலர் கண்காட்சி சிறப்பு பஸ்கள் இயக்கம்

ஊட்டி: ஊட்டி மலர் கண்காட்சிக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.
ஊட்டியில் இன்று மலர் கண்காட்சி துவங்குகிறது. பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை தருவதையொட்டி, சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன. வெளி மாவட்டங்களில் இருந்து, 300க் கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணிக்காக வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இதுமட்டுமின்றி, குன் னுார் - - மேட்டுப்பாளை யம் சாலை ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளது. ஊட்டியில் இருந்து செல்லும் வாகனங்கள் அனைத்தும் கோத்தகிரி வழியாகவும், மேட்டுப்பாளையத்தில் இருந்து வரும் வாகனங்கள், குன்னுார் வழியாகவும், மூன்று நாட்களுக்கு இயக்கப்படுகின்றன.

சுற்றுலா மையங்களை பார்வையிட செல்லும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, உள்ளூரில் சுழற்சி முறையில் பஸ்கள் இயக்கப்படுகிறது.

போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறுகையில், 'சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, கடந்த ஒரு மாதமாக, பல்வேறு பகுதிகளுக்கும், 40 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மலர் கண்காட்சிக்காக வரும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக, கூட்டத்தை அனுசரித்து, உள்ளூரில் கூடுதலான பஸ் கள் இயக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. கண்காணிப்பு பணியும் நடக்கிறது' என்றனர்.

## கோடை உழவு செய்தால் மழைநீர் வீணாகாது: விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை

கரூர்: கோடை உழவு செய்தால் மழைநீர் வீணாகாமல், நிலத்தில் சேமிக்கலாம் என, வேளாண்மை துறையினர் தெரிவித்தனர்.

கோடை உழவு செய்வது குறித்து வேளாண் துறை அதிகாரி கூறியதாவது: கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு, 652.2 மி.மீ., கோடை பருவத்தில் பெய்ய வேண்டிய சராசரி மழை, 109.5 மி.மீ., ஆனால், 850 மி.மீ., மழை பெய்துள்ளது. மழையை பயன்படுத்தி, கோடை உழவு செய்வதால் மழைநீர் ஓடி

வீணாகாமல் அந்த நிலத்திலேயே சேமிக்கப்படுகிறது. மண் அரிப்பு தடுக்கப்படுகிறது. மண்ணிற்குள் இருக்கும் கூட்டு புழுக்கள் அழிக்கப்படுகின்றன. தென்மேற்கு பருவ மழை காலத்தில் பெய்கிற மழையை கொண்டு மானாவாரி பயிர்களை சாகுபடி மேற்கொண்டு பயனடைலாம். கோடை உழவுப் பணிக்கு, வேளாண்மை பொறியியல் துறை மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வேளாண் பொறியல் துறையில் உழவு இயந்திரம் வாடகையாக மணிக்கு, 340 ரூபாய், மண் தள்ளும் இயந்திரம் மணிக்கு, 840 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் வாடகை தொகையை முன் கூட்டியே செலுத்தி தங்களது பெயரை பதிவு செய்யலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## தென்மேற்கு பருவமழை முன் எச்சரிக்கை ஆலோசனை கூட்டம்

தேனி: தென்மேற்கு பருமழை காலங்களில் மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் தேனி கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.

கலெக்டர் (பொறுப்பு) டி.ஆர்.ஓ., பொன்னாம்மாள் தலைமை வகித்து பேசியதாவது: மழை காரணமாக வெள்ளம் ஏற்படும்போது மழை நீர் தேங்காமல் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கு முகாம்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். கட்டுப்பாட்டு அறையில் 'ஒயர்லெஸ்' கருவிகளை இணைத்து பொதுமக்கள் எளிதில் தொடர்பு கொள்ள வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

வருவாய் துறையினருடன் தீயணைப்பு, போலீஸ் இணைந்து மீட்டு பணியில் ஈடுபட வேண்டும். பொதுப்பணித்துறை, உள்ளாட்சி கட்டுப்பாட்டிற்குள் உள்ள கண்மாய்களில் உடைப்பு ஏற்படாமல் பராமரித்து வைத்திருக்க வேண்டும்.

மருத்துவ குழுக்களை தயார்நிலையில் வைத்து தேவையான மருந்துகள், நோய் தடுப்பு மருந்துகளை இருப்பு வைத்திருக்க வேண்டும். குளோரினேசன் செய்து குடிநீர் வழங்க வேண்டும். நடமாடும் மருத்துவ குழு தயார் நிலையில் இருக்க வேண்டும். மழை சேதங்கள் குறித்து தகவல்களை பொதுமக்கள் மாநில அளவில் 1070, மாவட்ட அளவில் 1077 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், என்றார்.

கலெக்டர் நேர்முக உதவியாளர் பார்த்தீபன், உத்தமபாளையம் ஆர்.டி.ஓ., ராஜையா, பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் சேதுராமன், ஊராட்சிகள் உதவி இயக்குனர் வடிவேல், தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை அலுவலர் செந்தில்குமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

## 5 நாள் பெய்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

வாழப்பாடி: வாழப்பாடியில், இந்த மாதம், 5 நாட்கள் மழை பெய்ததால், மரவள்ளி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வாழப்பாடி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில், பெரும்பாலான விவசாயிகள் கிணற்று பாசன முறையை பின்பற்றுகின்றனர். அந்த பகுதியில் தொடரும் வறட்சியால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகள் வறண்டன. இதனால், அவ்வப்போது பெய்யும் மழைநீரை மட்டுமே நம்பி, நல்ல மகசூல் கொடுக்கும் தன்மை கொண்ட ஆண்டு கால பணப்பயிரான மரவள்ளியை, அதிக அளவில் விவசாயிகள் விரும்பி, பயிர் செய்து வருகின்றனர். இந்த பகுதியில், 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மரவள்ளி பயிரிடப்படுகிறது. மரவள்ளி குச்சிகளை 'கருனை கருனையாக' துண்டு போட்டு நறுக்கி, விளைநிலத்தில் 'பதிய' முறையில் பயிரிடுகின்றனர். 3 மாதத்துக்கு முன் பதியம் போடப்பட்ட மரவள்ளி செடிகள் வேர்பிடித்து துளிர் விட்டு வளரும் தருணத்தில் மழைப்பொழிவு இல்லாததால், காய்ந்து கருகும் நிலை ஏற்பட்டது. இதனால், மரவள்ளி பயிரிட்டுள்ள விவசாயிகள், மழைக்காக காத்து கிடந்தனர். இந்த நிலையில், இம்மாதம் முழுவதும் வெயில் கொளுத்திய நிலையிலும், 7ம் தேதி, 57 மி.மீ., 12ம் தேதி, 57 மி.மீ., 17ம் தேதி, 13 மி.மீ., 18ம் தேதி, 18 மி.மீ., 20ம் தேதி, 46 மி.மீ., என, பரவலான கோடை மழை பெய்தது. இதனால், மானாவரி புன்செய் நிலங்களில் பயிரிடப்பட்டு, சோர்ந்து கிடந்த மரவள்ளி பயிர்கள், துளிர் விட்டு வளர்ந்து பச்சை பசேல் என காட்சியளிக்கிறது. இதனால், மரவள்ளி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## அரசு கொள்முதல் செய்த நெல் மூடைகளுக்கு 6 மாதத்துக்கு பின் பணபட்டுவாடா துவக்கம் - கிலோ நெல்லுக்கு ரூ 1.20 குறைப்பு

முதுகுளத்துார்: முதுகுளத்துார் பகுதியில் அரசு கொள்முதல் செய்த நெல் மூடைகளுக்கு 6 மாதத்திற்கு பின் பண பட்டுவாடா துவங்கி உள்ளது. கிலோவுக்கு ஒரு ருபாய் 20 பைசா குறைத்து வழங்குவதால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

கடந்தாண்டு பருவமழை சீராக பெய்ததால் முதுகுளத்துோர் பகுதிகளில் நெல் மகசூல் அதிகரித்தது. இதையடுத்து விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்வதற்காக அரசு சார்பில் செல்வநாகயபுரம், சாம்பக்குளம், கமுதி, பார்த்திபனுோர், முதுகுளத்துோர் ஆகிய பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டது. இவற்றில் கிலோ ரூ.15.20 என, விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இதனால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் வெளிமார்கெட்டில் விற்பனை செய்வதை கைவிட்டு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்தனர். இதற்கான பணம் 6 மாதங்களாக பணபட்டுவாடா செய்யாததால் ஏமாற்றமடைந்த விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதுகுறித்து செல்வநாயகபுரம் விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இந்நிலையில் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கிலோவுக்கு ஒரு ரூபாய் 20 காசுகள் குறைத்து பணபட்டுவாடா செய்வதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து செல்வநாயகபுரம் விவசாயி நாகலிங்கம் கூறுகையில்,“ செல்வநாயகபுரம் அரசு கொள்முதல் நிலையத்தில் தட்டானேந்தல், கீரனுோர், வைத்தியனேந்தல், சித்திரங்குடி, கீழக்காஞ்சிரங்குளம் உட்பட 15 க்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் 40 கிலோ அளவு கொண்ட 2,778 நெல் மூடைகளை, கிலோ 15 ரூபாய் 20 பைசாவிற்கு விற்பனை செய்தனர். ஆனால் அரசு நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கலால், கிலோவுக்கு ஒரு ரூபாய் 20 பைசா குறைத்து, விவசாயிகளுக்கு பணபட்டுவாடா செய்யபட்டுள்ளது. இதனால் செல்வநாயகபுரம் அரசுநெல் கொள்முதல் நிலையத்தில் மட்டும் கொள்முதல் செய்யபட்ட 1,11,120

கிலோ நெல்லுக்கு தலா ஒரு ரூபாய் 20 பைசா வீதம், விவசாயிகளுக்கு 1,33,344 ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது," என்றார்.

இதுகுறித்து மாவட்ட கூட்டுறவு துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், " நெல் விலை குறைக்கப்பட்டுள்ளது குறித்து விசாரிக்கபடும்", என்றார்.

## ரூ.10 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல் என்.சி.எம்.எஸ்.,ல், நேற்று நடந்த ஏலத்தில், 550 பருத்தி மூட்டை, 10 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. நாமக்கல் மற்றும் சுற்று வட்டார பகுதிகளான பரமத்தி, திருச்செங்கோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பகுதிகளில், 6,000 ஏக்கரில், பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், நாமக்கல் என்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரம் தோறும், வியாழக்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வரப்படும். நேற்று நடந்த ஏலத்தில், மாவட்டத்தில், 550 மூட்டை பருத்தி ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதன்படி, ஆர்.சி.ஹெச்., குறைந்தபட்சம், 4,826 ரூபாய், அதிகபட்சம், 5,369 ரூபாய், டி.சி.ஹெச்., குறைந்தபட்சம், 5,437 ரூபாய், அதிகபட்சம், 6,359 ரூபாய், சுரபிரகம் குறைந்த பட்சம், 4,849 ரூபாய், அதிகபட்சம், 5,399 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 550 மூட்டை பருத்தி, 10 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## சூறாவளி காற்றுடன் பலத்த மழை

மல்லசமுத்திரம்: மல்லசமுத்திரம் சுற்றுவட்டார பகுதிகளில் வீசிய சூறாவளி காற்றினால், பல்வேறு இடங்களில் மரங்கள் சாய்ந்து விழுந்தன. திருச்செங்கோடு தாலுகா மல்லசமுத்திரம், வையப்பமலை, மரப்பரை, பருத்திப்பள்ளி, ராமாபுரம் உள்ளிட்ட இடங்களில், நேற்று முன்தினம் இரவு திடீரென சூறாவளி காற்று வீசியது. தொடர்ந்து, எதிர்பாராத விதமாக மழை பெய்ய துவங்கியது. இதில்,

பருத்திபள்ளி அடுத்த மாரம்பாளையம் என்ற இடத்தில், சாலையோரத்தில் இருந்த வேப்பமரம் சாய்ந்து விழுந்தது. சோமணம்பட்டி திருமணிமுத்தாற்றின் ஓரத்தில் இருந்த தென்னை மரமும், ராமாபுரம் அடுத்த, வேலணம்பாளையம் முனியப்பன் கோவிலில் போடப்பட்டிருந்த பந்தலும் சாய்ந்து விழுந்தன. ஒருசில இடங்களில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோவையில் தேயிலைத்தூள் ரூ.2.38 கோடிக்கு விற்பனை

கோவை : கோவை தேயிலை வர்த்தக மையத்தில் நடந்த ஏலத்தில் ரூ.2.38 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனையாகியுள்ளது. இது கடந்த வாரத்தை காட்டிலும் ரூ.20 லட்சம் அதிகமாகும். கோவை தேயிலை வர்த்தக மையத்தில் இந்த வாரம் நடந்த ஏலத்தில் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 1.84 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 1.63 லட்சம் கிலோ விற்பனையானது. 144 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.102.13.விற்பனை மதிப்பு ரூ.1.66 கோடி. ஏற்றுமதி ரகம் (லீப்) 87 ஆயிரம் கிலோ விற்பனைக்கு வந்தது.

75 ஆயிரம் கிலோ விற்பனையானது. 89 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.94.73. விற்பனை மதிப்பு ரூ.71 லட்சம். கடந்த வார விற்பனையோடு ஒப்பிடுகையில், உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.1 குறைந்துள்ளது. ஏற்றுமதி ரகம் கிலோவுக்கு ரூ.2.50 அதிகரித்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் ரூ.2.38 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரத்தை காட்டிலும் ரூ.20 லட்சம் குறைவாகும்.

## தேங்காய் வரத்து அதிகரிப்பு: விலை சரிவு

கோவை : தேங்காய் வரத்து அதிகரிப்பால் கோவையிலுள்ள உழவர் சந்தைகளில் சிறிய ரக தேங்காய் ரூ.5 முதல் ரூ.7க்கும், நடுத்தர தேங்காய் ரூ.10க்கும், பெரிய தேங்காய் ரூ.13 முதல் ரூ.15க்கும் விற்கப்படுகிறது. தென்னை விவசாயத்தில் கோவை மாவட்டம் முன்னிலையில் உள்ளது. இங்கு விளையும் இளநீர், தேங்காய், கொப்பரை ஆகியவை உள்நாட்டிலும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது. பொள்ளாச்சியில் இருந்து தினசரி கோவை ராஜவீதி மார்க்கெட்டிற்கு 20 லட்சம் எண்ணிக்கையிலான தேங்காய்களும், எம்ஜிஆர் மார்க்கெட்டிற்கு 2 லட்சம் தேங்காய்களும் விற்பனைக்கு வருகிறது.

அதே போல் ஆர்.எஸ்.புரம் மற்றும் சிங்காநல்லூர் உழவர் சந்தைகளுக்கு தினசரி தலா 10 ஆயிரம் தேங்காய் விற்பனைக்கு வருகிறது. இது வழக்கமான வரத்தை விட ஒரு மடங்கு அதிகமாகும். வரத்து அதிகரிப்பால் விலை சரிந்து வந்தது. கடந்த சில நாட்களாக சிறிய ரக தேங்காய் ரூ.5 முதல் ரூ.7க்கும், நடுத்தர ரக தேங்காய் ரூ.10க்கும், பெரிய ரக தேங்காய் ரூ.13 முதல் ரூ.15க்கும் விற்கப்படுகிறது. முன்பு ரூ.17 முதல் ரூ.18 வரை விற்ற தேங்காய் தற்போது ரூ.15க்கு விற்கப்படுவதால், தேங்காய் விற்பனை அதிகரித்துள்ளதாக உழவர் சந்தை நிர்வாகிகள் கூறுகின்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### நம் அருவி நீரை தடுப்பணையில் சேமித்து விவசாயத்திற்கு பயன்படுத்த ஏற்பாடு பணிகள் தீவிரம்



நம்அருவி அருகில் கட்டப்பட்டு உள்ள தடுப்பணையையும், அதன் அருகே நீரை கொண்டு செல்ல வாய்க்கால் அமைக்கும் பணி நடைபெற்று வருவதையும் படத்தில் காணலாம்.

கொல்லிமலையில் உள்ள நம் அருவி உபரி நீரை அங்கு கட்டப்பட்டு உள்ள தடுப்பணையில் சேமித்து அப்பகுதியில் உள்ள விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நம் அருவி

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் உள்ள அரியூர்நாட்டில் புகழ் வாய்ந்த நம் அருவி உள்ளது. அந்த அருவிக்கு அங்குள்ள வனப்பகுதியில் இருந்தும், நீரூற்றுகளில் இருந்தும் தொடர்ச்சியாக தண்ணீர் வரத்து உண்டாகி அருவியில் கொட்டுகிறது. அந்த அருவியில் விழும் நீர் அங்குள்ள வளப்பூர்நாடு வழியாக ஆகாயகங்கை நீர்வீழ்ச்சிக்கு சென்று, அதன் பிறகு திருச்சி மாவட்ட எல்லையான

புளியஞ்சோலையின் மேல்பகுதியில் உள்ள ஓலையாறு வழியாக சென்று விடுகிறது.

இதனால் அந்த அருவி நீரை விவசாயத்திற்கு பயன்படுத்த கடந்த ஆண்டு மாவட்ட ஊராட்சிக்குழு நிர்வாகம் மூலமாக தடுப்பணை கட்ட ஏற்பாடு நடந்தது. இதற்காக ரூ.1 கோடியே 30 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. அதில் கடந்த சில மாதங்களுக்கு முன்பாக தடுப்பணை கட்டி முடிக்கப்பட்டது.

வாய்க்கால் அமைக்கும் பணி

அதைத் தொடர்ந்து நம் அருவியில் இருந்து எட்டுக்கையம்மன் குளம், புலிக்குளம், ஊர்கலிங்கம் குளம், புதுவலவு குளம் ஆகிய பகுதி வழியாக பெரிய ராட்சத குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு செல்ல சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவுக்கு வாய்க்கால் அமைக்கும் பணி தற்போது நடந்து வருகிறது.

இந்த பணிகள் நிறைவுற்றால் அரியூர்நாடு அதையடுத்து உள்ள வளப்பூர்நாடு ஆகிய நாடுகளில் உள்ள 1,000 ஏக்கருக்கு மேல் விவசாய நிலம் தண்ணீர் பாசனம் பெறும். அந்த நீரை கொண்டு வருடத்தில் 2 முறை நெல் அறுவடை விவசாயம் செய்யலாம் என கொல்லிமலை மலைவாழ் மக்கள் தெரிவித்தனர்.